**இலங்கை கால்பந்து சம்மேளனம் - 2018**

---

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, திரண்ட நிதிய மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்புஅபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவு முயற்சிகளுக்காக இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் ஒரே தடவையில் கையேற்கப்பட்ட போதும் வெவ்வேறாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதும் சம்மேளத்தினால் ரூபா 71,242,177 தொகையான கட்டிடங்கள் கணக்கீடு செய்யபப்ட்டிருந்த போதிலும் அக்கட்டிடங்கள் அமைந்துள்ள காணியின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சிறிய மற்றும் நடுத்தர அளவு முயற்சிகளுக்காக இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களது பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 3,120,012 கிரயமுடைய இயந்திர உபகரணங்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்த போதும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைவாக மதிப்பிடப்பட்ட வழுவானது நியமத்தின் 10 அத்தியாயத்தின் 18 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சிறிய மற்றும் நடுத்தர அளவு முயற்சிகளுக்காக இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முன்னைய ஆண்டுகளுக்குரிய கணக்கீடு செய்யப்படாத ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ரூபா 6,746,807 நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்பட்டிருந்த போதும் அத தொடர்பாக நிதியத்தின் 10 ஆம் அத்தியாயத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் வெளிப்படுத்தியிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தபப்ட வேண்டும். | - மேற்படி - |
| (ஈ) | ரூபா 5,600,000 பெறுமதியான குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மோட்டார் வேன் வண்டி நியமத்தின் 20 ஆம் அத்தியாயத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் குத்தகை ஆதனமாக குறிப்பிடப்படாதிருந்திருந்ததுடன் இறையில் ஆதனங்களின் கீழ் மோட்டார் வாகனங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | குறித்த சொத்துக்கள் குத்தகை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படாதிருந்ததுடன் நடைமுறையல்லாத சொத்துக்களில் வெளியிடப்பட்டிருந்தது. | நியமத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் குத்தகை ஆதனங்கள் வேறாக நிதிக்கூற்றுக்களில் சுட்டிக் காட்டப்பட வேண்டும். |
| (உ) | ரூபா 5,899,457 பெறுமதியான ஓய்வூதிய நலன்கள் நிதிக் கூற்றுக்களில் பொறுப்பொன்றாக காண்பிக்கப்பட்டிருந்த போதும் நியமத்தின் 28 ஆம் அத்தியாயத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வூதிய நலன் பொறுப்பின் தற்போதய பெறுமதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது ஓய்வூதிய நலன் பொறுப்புக்களில் தற்போதய பெறுமதி கணக்கிடுவதற்காக தகைமையுடைய மதிப்பீட்டாளர் நியமிப்பதற்கு தற்போது நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய ஓய்வூதிய நலன் பொறுப்பு தற்போதய பெறுமதி அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் சம்மேளத்தினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,676,966 தொகையானசட்டச் செலவினம் தொடர்பாக நியமத்தின் 8 ஆம் பந்தியின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நியமத்தின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

--------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமையாளரால் போட்டி நடுவர்களின் தவறான பெயர்கள் உள்ளடக்கப்பட்டு பணம் பெற்றுக்கொண்டுள்ளதாக 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது | உரிய வழக்கு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் மோசடி செய்யப்பட்ட பணமாக ரூபா 14,525,389 என காண்பிக்கப்பட்டிருந்தது, | மோசடி செய்யப்பட்ட பண அளவினை தாமதமின்றி இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் மற்றும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | கண்டறியப்பட்டது. இப் பண மோசடி தொடர்பாக குற்றத்தடுப்புப் பரிசோதனை திணைக்களத்தினால் மேலதிக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மோசடி செய்யப்பட்ட பணத்தின் அளவு மீளாய்வாண்டு வரை கண்டறியப்படவில்லை. இது தொடர்பாக முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்ட நிதிய மாற்றங்களாக ரூபா 14,525,389 தொகையை பெறவேண்டிய கணக்குகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்நிலைமை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பேரில் சம்மேளனத்தின் மூலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய விளையாட்டரங்குகளில் அபிவிருத்தி நடவடிக்கை களுக்காக சர்வதேச உதைப்பந்தாட்டச் சம்மேளத்தினால் நேரடியாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களின் பெறுமதி குத்தகை சொத்துக்களின் கீழ் தவறாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் மீது பிற்போடப்பட்ட வரவுப் பொறுப்பொன்றாக ரூபா 137,994,358 ஐந்தொகை திகதியில் நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் தவறாக காண்பிக்கப்பட்டிருந்தது.இது தொடர்பாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இது தொடர்பான இறுதி தீர்மானம் எடுத்தல் 2019 நிதியாண்டு வரை பிற்போடப்பட்டுள்ளது. மேலும் நடைமுறையல்லாத சொத்துக்கள் மீள்மதிப்பீட்டின் போது இப்பெறுமதி மிகவும் சரியாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,100,200 இன் கீழான குத்தகையின் கீழ் பெற்றுக்கொண்ட தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணி 2015 ஆம் ஆண்டு முதல் மற்றும் ரூபா 5,306,765 தொகையான யாழ்ப்பாண விளையாட்டுத் தொகுதி 2011 ஆம் ஆண்டு முதல் காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது நடைமுறையல்லாத சொத்துக்கள் மீள்மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதனுடன் இணைந்ததாக இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும். | குத்தகை சொத்துக்கள் காலக்கழிவு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 30 ஆண்டு காலத்திற்காக குத்தகையின் கீழ் பெற்றுக் கொண்டிருந்த கம்பஹா, நோர்வூட் மற்றும் அம்பாறை பிரதேசங்களில் அமைந்துள்ள 03 விளையாட்டு தொகுதிகள் நிதி நிலைமைக் கூற்றில் குத்தகை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | இந்த குத்தகை சொத்துக்களின் பெறுமதி கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2016 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 724,201 தொகையான முற்கொடுப்பனவு 03 மீதிகள் தீர்வு செய்யப்படாமல் பெறவேண்டிய கணக்குகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | முற்கொடுப்பனவு தாமதமின்றி கணக்குகளில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | ஏனைய பெறவேண்டிய கடன் | 1,000,000 | | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களுக்குரிய போதியளவும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீள பெறவேண்டிய வைப்புக்கள் | 1,278,403 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் காலப்பகுப்பாய்வு | | |
| (இ) | வியாபார கடன்பட்டோர் | 547,505 | | | |
| (ஈ) | வியாபார கடன்கொடுத்தோர் | 533,464 | | | |

| | | | |
|---|---|---|---|
| (உ) | தலைமை அலுவலக கட்டிடம் | 41,720,741 | உரித்துறுதி |
| (ஊ) | பத்தகான கட்டிடம் | 29,521,436 | |
| (எ) | நிலையான சொத்துக்கள் | 105,522,883 | பௌதீக மெய்மையாய்வு அறிக்கை |
| (ஏ) | நிறுத்திவைக்கப்பட்ட நிதியம் | 4,582,669 | விரிவான அட்டவணை |

## 1.6 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 கிடைக்க வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 12,489,521 தொகையான 05 மீதிகளை அறவிடுவதற்காக சம்மேளத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | அறவிடப்பட வேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அறவிட முடியாத மீதிகள் தொடர்பாக நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்தின் பேரில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் ரூபா 573,464 தொகையான 02 கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் 2017 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 18,206,454 தொகையான 06 கடன் மீதிகள் தீர்வு செய்யப்படாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | செலுத்தப்பட வேண்டிய பணத்தை விரைவில் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.3 முற்பணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டிற்குரிய 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சம்மேளத்தினால் விளையாட்டுக்கள் மற்றும் விளையாட்டு கருத்தரங்குகள் நடாத்துவதற்காக போட்டி அமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் மொத்தம் ரூபா 2,252,067 ஆக இருந்தது. குறித்த செய்றபாடுகள் முடிவடைந்தவுடன் முற்பணங்களை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் வழங்கப்பட வேண்டிய முற்பணத்தை தீர்மானித்தல் மற்றும் முற்பண பதிவேடு ஒன்று பேணுதல் இடம்பெறவில்லை. | சந்தர்ப்பத்திற்கேற்ப ஆகக்கூடிய முற்பண தொகை வேறு படுவதுடன் அதனை தீர்வு செய்வதற்காக திட்டவட்டமான காலப்பகுதியொன்றை வழங்குதல் 2019 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும். | குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் முடிவுற்றவுடன் தாமதமின்றி முற்பணங்களை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,775,153 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை 31,938,592 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 26,163,439 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செலவினங்கள் ரூபா 76,181,635 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதம் 2.32 முதல் 2.69 வரை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் சம்மேளனத்தின் குறுங்கால பொறுப்பு தீர்ப்பனவு இயலுமை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தினால் 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டமொன்றும் பெறுகை காலச் சட்டகமொன்றும் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கால்பந்து சம்மேளனம் மீளாய்வாண்டில் ரூபா 2,725,671 ஆன பெறுகைகளை மேற் கொண்டிருந்ததுடன் அதற்காக தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது கால்பந்தாட்ட சம்மேளனம் கொள்வனவு நடைமுறை யொன்றை செயற்படுத்தி வருவதுடன் 2020 ஆம் ஆண்டு முதல் தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |